செ.வெ. எண்: 312

நாள்: 25.05.2012

# பத்திரிக்கைச் செய்தி

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கான பொது மாறுதல் கலந்தாய்வு

2012–2013–ஆம் கல்வி ஆண்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகள் மற்றும் விடுதிகளில் பணிபுரியும் இடைநிலை ஆசிரியர் / காப்பாளர், பட்டதாரி ஆசிரியர் / காப்பாளர், சிறப்பு ஆசிரியர்கள், ஆரம்ப/ நடுநிலை பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் மாவட்டத்திற்குள் மாறுதல் வழங்கும் பொது மாறுதல் கலந்தாய்வுகள் அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளி, நாகல்கேணி, குரோம்பேட்டை, சென்னை–44 என்ற முகவரியில் ஆதிதிராவிடர் நலத்துறை ஆணையர் தலைமையில் கீழ்காணும் அட்டவணைப்படி நடைபெறும். 02.06.12 முற்பகல் காஞ்சிபுரம், அரியலூர், சென்னை மாவட்டங்கள், அன்று பிற்பகல் திருவள்ளூர், கோயம்புத்தூர், நாகப்பட்டினம் மாவட்டங்கள், 04.06.2012 முற்பகல் கடலூர், தர்மபுரி, திருப்பூர் மாவட்டங்கள், அன்று பிற்பகல் விழுப்புரம், திண்டுக்கல், தூத்துக்குடி மாவட்டங்கள், 05.06.2012 முற்பகல் வேலூர், ஈரோடு, விருதுநகர் மாவட்டங்கள், அன்று பிற்பகல் திருவண்ணாமலை, சிவகங்கை, கன்னியாகுமரி மாவட்டங்கள், 06.06.2012 முற்பகல் திருச்சி, மதுரை, கரூர் மாவட்டங்கள், அன்று பிற்பகல் பெரம்பலூர், தேனி, திருவாரூர் மாவட்டங்கள், 07.06.2012 முற்பகல் திருநெல்வேலி, நாமக்கல், இராமநாதபுரம் மாவட்டங்கள், அன்று பிற்பகல் சேலம், கிருஷ்ணகிரி, நீலகிரி, தஞ்சாவூர் மாவட்டங்கள்.

ஒம்/–பொ.சிவசங்கரன்,
ஆதிதிராவிடர் நல ஆணையர்,

**வெளியீடு: –**

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.